பக்கங்கள் - 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 10 | செவ்வாய்க்கிழமை | 26.12.2023 | கதிர் 410

## ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றே தீரும்
### ஜேவிபி கருத்து

ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும். அதில் மாற்றுக்கருத்தில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

2➤

## டெங்குக் காய்ச்சலால் குழந்தை பரிதாப சாவு

யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த ஆண் குழந்தையொன்று டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளது.

மதுரன் கிருத்திஸ் என்ற பதினொரு மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

2➤

## உலக தமிழர் பேரவை உறுப்பினர்களின் ஒளிப் படங்கள் மீது முட்டை வீசி எதிர்ப்பு
### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆவேசம்



வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இமாலயப் பிரகடனத்தை வெளியிட்டுள்ள உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் புகைப்படங்கள் மீது முட்டை வீசி எதிர்ப்புக்களை

2➤

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுன சார்பில் போட்டியிடுவதற்கு கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேராவை நிறுவத்துவதற்கான நகர்வுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. எனினும் கட்சிக்குள் ஒரு சாரார் ராஜபக் ஷக்களுக்குள் ஒருவரே ஜனாதிபதித் தேர்தலில் நிற்கவேண்டும் என்று விரும்புகின்றனர். குறிப்பாக வயதைப் புறக்கணித்து நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால் அந்த யோசனைக்கு கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஆதரவு கிடைக்கவில்லை. நாமல் இன்னும்கொஞ்சக்காலம்பொறுத்திருக்கலாம் என்பதே அவரது முடிவாக இருக்கின்றது. நாமல் இல்லாத பட்சத்தில் சமல் ராஜபக்ஷவைக் களமிறக்கலாம் என்கிற யோசனையும் முன்வைக்கப்படுகின்றது.

இப்படிக் கட்சிக்குள் வேறு வேட்பாளர்களையும்

2➤

## நீதிமன்ற ஆணையை புறக்கணிக்கும் ஆட்சியிடமிருந்து
# நாடு விடுதலை பெறும் காலம் தொலைவில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலை
### நத்தார் ஆராதனையின்போது உருக்கம்



**உயர் நீதிமன்றத்தின் ஆணையை கவனத்தில் கொள்ளாத ஆட்சியாளர்களிடமிருந்து நாடு விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளதாக பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் ஆட்சியாளர்களே எமக்குக் கிடைத்திருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.**

**நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதான நள்ளிரவு ஆராதனை கட்டான - ஹல்பே புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலயத்தில் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

2➤

## அஸ்வெசுவ கொடுப்பனவுகளுக்கு ஜனவரியில் மீண்டும் விண்ணப்பம்
### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2➤

## இளையவர் ஒருவரே அடுத்த ஜனாதிபதியாக வேண்டும்
### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



துறைசார் நிபுணத்துவம் மிக்க இளையவர் ஒருவரே அடுத்த ஜனாதிபதியாகி நாட்டைப் பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

2➤

### குடாநாட்டில் டெங்கு அதிகரிப்பு
## நுளம்புகளை கட்டுப்படுத்த மக்கள் ஒதுழைப்பு தேவை
### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தங்களது சுழலை நுளம்புகள் பரவாத வகையில் பாதுகாக்க வேண்டும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்தார்.

டிசெம்பர் மாதத்தில் இது வரை 945 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளதுடன் நேற்று மட்டும் 40 டெங்கு நோயாளிகளுக்கு

2➤

### பதவியில் இருக்கும் வரைக்கும் அடிபணியாது
## போதைக் கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்
### அமைச்சர் டிரான் அலஸ் சூளுரை

நான் அமைச்சுப்பதவியில் இருக்கும் வரையில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக்குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கிரிந்திவெலவில் நேற்று- பொதுமக்கள் சந்தையை

2➤

## மருந்துக் கொள்வனவு முறைகேடு ஆவணங்கள் அரச பகுப்பாய்வுக்கு

சர்ச்சைக்குரிய மருந்து கொள்வனவு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் உள்ளிட்ட மேலும் சில ஆவணங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2➤

## குற்றவியல் சட்டக்கோவையில் ஜனவரியில் திருத்தங்கள் வரும்
### நீதி அமைச்சர் தெரிவிப்பு

நீதிமன்றத்தில் ஒருவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் அவரது தண்டனைக் காலத்திலிருந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காலத்தைக் கழிக்கும் வகையில் குற்றவியல் சட்டங்களில் திருத்தத்தைக் கொண்-டுவருவதற்கான பிரேரணை ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் கலாநிதி.விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

2➤

## இனி இது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்த பேச்சுக்கள் அடிபடுவதன் காரணமாக, தம்மிக்கவை வேட்பாளராக்குவதற்கான வெளி அழுத்தங்களைக் கொடுக்கும் வேலைகள் இப்போதே தொடங்கிவிட்டன. வர்த்தகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைக்கும் முயற்சியில் பொதுமக்களையும் இணைந்து கொள்ளுமாறு பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தம்மிக்க பெரேராவுக்குச் சொந்தமான பாலேஸ் இன்ரநாஷனல் ஹோல்டிங்ஸ் (Ballys International Holdings) நிறுவனத்தினால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

"நான்கிற்கும் அதிகமான ஜனாதிபதி வேட்பாளர்கள் உள்ளனர். தம்மிக்க பெரேராவும் போட்டியிடுவதாக கூறப்படுகிறது. எமது கட்சியில் அவர் போட்டியிடுவது குறித்து எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அவர் தேர்தலில் போட்டியிட்டால் சிறந்த ஒரு வேட்பாளர்தான்" என்று அண்மையில் மகிந்த ராஜபக் ஷ தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே தம்மிக்கவை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்கு இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தம்மிக்க பெரேரா பல தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து தனக்கு ஆதரவளிக்கும்படி கேட்கத் தொடங்கியிருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பாக பொது ஜன பெரமுனவிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்பட்டுவரும் உறுப்பினர்களை இலக்கு வைத்து அவரது நகர்வுகள் இடம் பெற்று வருகின்றன. அவர்களில் பலரை ஏற்கனவே சந்தித்துப் பேசி இருக்கிறார் தம்மிக்க. அரகலய போராட்டத்தின் பின்னர் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற இவர்களின் ஆதரவைப் பெற்றால் தான் தேர்தலில் சுலபமாக வேட்பாளராகிவிடலாம் என்று கருதுவதன் காரணத்தால் தம்மிக்க தொடர்ந்தும் அவர்களை நோக்கி காய்களை நகர்த்தி வருகின்றார்.

இடிமின்னல்
(idiminnal23@gmail.com)

## ஜனாதிபதி தேர்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடமுடியாது. திட்டமிட்டபடி அது அடுத்த வருடத்தில் நடைபெறும். அதனையிட்டு யாரும் குழப்பமடையத் தேவையில்லை. அரசமைப்புக்கு அமைவாக எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி புதிய ஜனாதிபதி பதவியேற்றாக வேண்டும்.

ஆகவே ஒக்டோபர் 17ஆம் திகதியாகின்றபோது ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர்
Kalaikkathir

# சேறு பூசும் செயற்பாடுகளுக்கு அஞ்சிப் பின்வாங்கமாட்டோம்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஊடக கண்காட்சிகள் என சிலர் விமர்சிக்கின்றனர். இதுபோன்ற சேறு பூசும் செயற்பாடுகளுக்கு அஞ்சப்போவதில்லை. இவ்வாறு செய்தால் நாம் அச்சமடைந்து இந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்ளாமல் பின்வாங்குவோம் என நினைக்கின்றனர். நான் அமைச்சுப் பொறுப்பில் இருக்கும் வரையில் பாதாளக் குழுக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

'யுக்திய' போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை ஒடுக்கும் விசேட சுற்றிவளைப்புகளில் கடந்த ஒருவார காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் தொடர்பில் கல்கிஸ்ஸவில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நான் அமைச்சு பொறுப்பை ஏற்கும்போது முழு நாடும் தீ பற்றிக்கொண்டிருந்தது. அப்போது சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. அதனை நான் செய்தேன். காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு தாக்குவதாகக் கூறினார்கள். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. அன்று பொலி-ஸாரை மக்கள் எவ்வாறு நடத்தினார்கள் என்றும் எமக்குத் தெரியும். போதைப்பொருள் பாவனையாளர்களும் போதைப்பொருள் வர்த்தகர்களும் நாட்டில் அதிகரிப்பதற்கு காலி முகத்திடல் போராட்டக்களம் காரணமாக அமைந்தது.

ஒரு வருடத்துக்கு முன் பொலிஸார் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே செயற்பட்டனர். அப்போது அவர்களுக்கு குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நேரம் இருக்கவில்லை. அதன் பின்னரே போதைப்பொருள் தொடர்பில் சந்தேக நபர்களை தேடி சுற்றிவளைப்புகளை மேற்கொண்டோம்.

அன்று தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் தலைமையில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த குழுவொன்றை அமைத்தேன். வெறும் பேச்சுக்களில் மாத்திரம் நிறுத்திவிடாமல் செயற்பாட்டில் கொண்டு வந்து இதனை முற்றாக இல்லாமல் செய்யவேண்டும் என்று நினைத்தோம். இதனை இலகுவாக செய்ய முடியாது என்பதை நாம் அறிவோம்.

முதலில் போதைப்பொருள் வர்த்தகம் கடத்தல்காரர்கள் என வெள;வேறு அடிப்படையில் பெயர் பட்டியல் ஒன்றைத் தயாரித்தோம். அதனடிப்படையில் நான்காயிரம் கொண்ட அந்த பெயர் பட்டியலில் தற்போது 1,025 போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊடக கண்காட்சிகளுக்காக நாம் இதனைச் செய்வதாக சிலர் விமர்சனம் செய்கின்றனர். இதனை நாம் மேற்கொள்வதை கண்டு சிலர் பொறாமைப்படுகின்றனர். போதைப்பொருள் வர்த்தகர்களுடனும் பாதாளக் குழு உறுப்பினர்களுடனும் தொடர்பில் உள்ளவர்களே எம்மை இவ்வாறு விமர்சிக்கின்றனர். என்னையும் பதில் பொலிஸ்மா அதிபரையும் சேறு பூசும் வேலைகளைச் செய்கின்றனர். அவ்வாறு செய்தால் நாம் அச்சமடைந்து இந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்ளாமல் பின்வாங்குவோம் என நினைக்கின்றனர். அவ்வாறு நடைபெறாது. எந்தவொரு அச்சுறுத்தல் வந்தாலும் அல்லது எந்தவொரு இடையூறு வந்தாலும் நாம் பின்வாங்கப்போவதில்லை.



நான் அமைச்சு பொறுப்பில் இருக்கும் வரையில் பாதாளக் குழுக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. யார் என்ன கூறினாலும், இதை நாம் நிறுத்தப்போவதில்லை. இதற்கு ஜனாதிபதியின் முழு ஒத்துழைப்புகளும் எமக்குக் கிடைத்துள்ளது. அவர் ஆதரவு எமக்குள்ளது. இந்த வேலைத்திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுப்போம். – என்றார்.

(05)

# அலஸின் குண்டர் செயற்பாடுகளுக்கு கத்தோலிக்கத் திருச் சபை அஞ்சாது

## அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ போர்க்கொடி

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் குண்டர் செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. அருட்தந்தை சிறில் காமினி தொடர்புடைய விபத்து குறித்து பேராயருக்கு நெருங்கிய ஒருவர் அவருடன் தொலைபேசியில் உரையாடினார் என அவர் தெரிவித்துள்ளமை முற்றிலும் பொய்யாகும் என்று பேராயர் இல்லத்தின் மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பு பிரிவின் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ தெரிவித்தார்.



கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அருட்தந்தை சிறில் காமினியால் இடம்பெற்ற விபத்தின்போது, பதில் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடியதாகவும், பிணை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்ததாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருக்கின்றார். அது முற்றிலும் பொய்யானதொரு விடயமாகும்.

விபத்து இடம்பெற்று அருட்தந்தை சிறில் காமினி பொலிஸாரால் விடுவிக்கப்பட்ட மறுநாளே தான் இந்த சம்பவம் தொடர்பில் தெரிந்துகொண்டதாக பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடமோ அல்லது பொலிஸாரிடமோ தனது பெயரைக் கூறி சிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியளவு நெருக்கமானவர்கள் எவரும் தனக்கு அருகில் இல்லை என்றும், அவ்வாறு எவரும் செயற்பட்டிருப்பார்களானால், அது தனக்கு பெரும் ஆச்சரியம் அளிப்பதாகவும் பேராயர் குறிப் பிட்டுள்ளார்.

எனவே, அமைச்சரால் பேராயரை தொடர்புபடுத்தி கூறப்பட்ட விடயங்கள் முற்றிலும் பொய்யானவை என்பதை நாம் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம். அத்தோடு அருட்தந்தை சிறில் காமினியும் இவ்வாறு ஒருவர் பதில் பொலிஸ்மா அதிபரிடம் பேசிய விடயத்தை அறிந்திருக்கவில்லை. எனவே இவ்வாறு அப்பட்டமான பொய்களைக் கூற வேண்டாம் என்று அமைச்சர் டிரான் அலஸிடம் கேட்டுக்கொள்வதோடு, மாறாக அமைச்சர் கூறுகின்றமை உண்மையெனில், அதனை சாட்சியங்களுடன் நிரூபிக்குமாறும் சவால் விடுக்கின்றோம்.

அமைச்சர் டிரான் அலஸின் செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இவர் அண்மைய நாள்களாக கத்தோலிக்க சபைக்கும், பேராயர் மீதும் அவதூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளுமாறு அமைச்சரை வலியுறுத்துகின்றோம். இவ்வாறு கத்தோலிக்க சபை மற்றும் பேராயர் மீது அவதூறு பரப்பும் செயற்பாடுகளானவை மதங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாகவும், மதத்தை நிந்திப்பதாகவும் உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் அவரை சாபத்துக்குள்ளாக்கும். அரசாங்கத்தின் பிரதான அமைச்சரான டிரான் அலஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்றாரா என்ற சந்தேகம் நிலவுகிறது.

அமைச்சர் டிரான் அலஸ் அவரது குண்டர் செயற்பாட்டை வேறு நபர்களிடம் காண்பிக்கலாம். ஆனால், கத்தோலிக்க சபையைச் சேர்ந்த நாம் அதற்கு ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. – என்றார்.

(05)

# 2 கோடி ரூபாய் பெறுமதியான கடத்தல் பீடி இலைகள் சிக்கின

சட்ட விரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான 1,955 கிலோ பீடி இலைகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று நுரைச்சோலை பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைப் பிரிவுக்குச் சொந்தமான கடற்படை கப்பலான தம்பபன்னி, நுரைச்சோலை பகுதியில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில், நுரைச்சோலை பொருளாதார நிலையத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று சோதனையிடப்பட்டபோதே கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார் என கடற்படை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் லொறி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (05)



# போதைப் பொருள் கடத்தல் குற்றத்தில் கனேமுல்லையில் பெரும் புள்ளி கைது

பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரரான மானகே சுமுது துஷ்மந்த எனப்படும் ரங்க என்பவர் கனேமுல்லையில் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார் எனக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் மூலம் சம்பாதித்ததாக நம்பப்படும் அவரின் சொகுசு ஜீப், மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

37 வயதுடைய இந்த சந்தேக நபர் போதைப்பொருள் கடத்தலுக்காகக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் 4 வீடுகளில் 2 வீடுகள் மனைவி பெயரிலும், 2 வீடுகள் மனைவியின் தந்தை பெயரிலும் கொள்வனவு செய்-யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது 2006ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுவரை தெமட்டகொட சமிந்த மற்றும் சரத் பண்டார அல்லது எஸ்.எப்.சரத் ஆகியோருடன் போதைப்பொருள் கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# உடுநுவர உள்ளூராட்சி சபை முன்னாள் தலைவர் கைது

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, பல்வேறு பிரதேசங்களில் மக்களை ஏமாற்றி ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் பண மோசடி செய்தார் எனக் கூறப்படும் உடுநுவர உள்ளூராட்சி சபையின் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு) முன்னாள் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பேராதனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் தொழில் தருவதாக கூறி 3 லட்சம் முதல் 10 லட்சம் வரை பணம் பெற்றுள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவர் தொடர்பில் பேராதனை பொலிஸாருக்குக் கிடைத்த 8 முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டெங்கிடமிருந்து பாதுகாப்பு தேடுவோம்

தொடரும் மழைக் காலத்தில் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் அதன் தாக்கத்தால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐம்பது வரையானோர் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். கடைசியாக யாழ். குடாநாட்டில் பச்சிளம் குழந்தை ஒன்றும் டெங்கினால் உயிரிழந்துள்ளது.

தொற்றுநோயியல் தகவல்களின்படி மார்கழி மாதம் வரையில் மட்டும் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேல் மாகாணமே நோயின் மிகத் தீவிர தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளது எனினும் ஏனைய பகுதிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவரிகளில் அதிகளவானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக கொழும்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு இந்த வருடத்தில் மட்டும் இதுவரையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று இந்த வருடத்தில் இதுவரையில் 50 பேர் வரையில் டெங்கு நோய்த் தாக்கத்தின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

காவி நோய்களுள் இலங்கையில் டெங்கு நோய் முக்கிய இடத்தினை வகிக்கிறது. முதல் தடவையாக ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் டெங்கு நோயென உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நோயாளி 1962ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டார். அது முதல் இந்த நோயின் தாக்கம் இலங்கையிலிருந்து அகலவில்லை. சில பல சமயங்களில் இது கொள்ளை நோய் என்கிற அளவிற்கான பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. டெங்கு கொள்ளை நோய் நிலைமை1965 - 1966 ஆம் ஆண்டுகளில் பதிவாகியதுடன் டெங்கு குருதிப்பெருக்கு நோயாளர்கள் சிலர் அப்போது இனங்காணப்பட்டனர்.

இந்த வருட தொடக்கம் முதலே டெங்கு நோயின் தாக்கம் தீவிரமாக இருப்பதாக மருத்துவத்துறையினர் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வந்திருந்தார்கள். மழை காலத்தில் நிலமை இன்னும் தீவிரமடையும் என்றும் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிவந்தார்கள். அதுபோன்றே நிலமை தற்போது தீவிரமடைந்துள்ளது.

அரசு, சுகாதாரத்துறை, உள்ளூராட்சி சபையினரின் நடவடிக்கைகளால் மட்டும் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்கிற நிலை கடந்தாகிவிட்டது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் தன்னிலை உணர்ந்து அர்ப்பணிப்போடு செயற்படும்போது மட்டுமே நிலமையைக் கட்டுப்படுத்தி உயிரிழப்புக்களைத் தடுக்க, தவிர்க்க முடியும். முக்கியமாக வீடுகள் வளவுகளில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு அவற்றை அகற்றிவிடுவது, சுற்றுப்புறச் சூழலைத் துப்புரவாக வைத்திருப்பது என்று ஒவ்வொருவரும் தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதன் மூலமே இந்தப் பேரிடரிலிருந்த காத்துக் கொள்ள முடியும்.

டெங்குவில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளை தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். அதனாலேயே மழைக் காலம் அதன் பரவுகைக்கு ஊக்கம் தருவதாக அமைகின்றது. பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட தேங்காய் சிரட்டைகள், பிளாஸ்டிக் பொருட்கள், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் நீர் தேங்கியிருக்கும்போது டெங்கு கொசுக்களின் உருவாக்கம் அதிகரிக்கின்றன. இதனால் நோய்த் தாக்கமும் அதிகரிக்கிறது. முடிந்தளவுக்கு இப்பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். வளவுகளையும் துப்புரவாக்கி தூய்மைப் படுத்தி எம்மை நாமே காத்துக்கொள்வோம்.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# மேன்மைகொள் சைவநீதி விளங்கத் திருவாசகத் தேனைப் பருகுங்கள் !

இறைவன் தன் திருவடியால் இந்நிலமிசை வந்து அருள பாலித்துத் தனது திருக்கரத்தால் எழுதிய பெருமை பெற்றது திருவாசகம் . இத்திருவாசகத்தைக் கேட்டவரும் உருகுவார்.. படித்தவரும்உருகுவார்.இதனாலத்தான் திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்று சொன்னார்கள் போலும்.தேன் மருத்துவ குணம் கொண்டது. தானும் கெடாது தன்னைச் சேர்ந்ததையும் கெடவிடாத தனமை கொண்டது.இதனால்த் தான் திருவாசகம் என்னும் தேன் என்று யாவரும் ஏற்றிப் போற்றுகின்றனர்.தமிழர் மட்டுமின்றி மேனாட்டினரும் திருவாசகத்தை உயர்ந்த நிலையிலேயே வைத்துள்ளனர்.கல்லையும்கரைக்கும் தன்மையுடையது திருவாசகம்.கல்நெஞ்சையே நல்நெஞ்சாக்கும் பெருமையும் உடையது திருவாசகம்..

தோத்திரங்களும் சாத்திரங்களும் சைவத்தின் இரு கண்களாகத் திகழ்கின்றன.அந்தச் சைவத்தின் முழுமுதல்தெய்வமாகச் சிவனே விளங்குகின்றார்.' சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வமில்லைஎன்பதுசைவத்தின் அறுதியான முடிவாகும்.அன்பு நெறியால் இறைவனை காட்டுவன தோத்திரங்கள்.அறிவு நெறியால் இறைவனைக் காட்டுவன சாத்திரங்கள்.இவ்விரு நெறிகளுமே இறையுண்மையையே காட்டி நிற்கின்றன.

வேதாந்தம் என்னும் ஆரா அருங்கனி பிழிந்த சாரம் கொண்டதேசைவசித்தாந்தம்.இது தமிழ்நாட்டுடனும்ஈழத்துடனும் நெருக்கமான உறவினைக் கொண்டது.இப்பகுதிகளின் பண்பாட்டு உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்பைச் செய்து வந்துள்ளது.

சமயத்தையும் தத்துவ ஞானத்தையும் இணைத்தது சைவசித்தாந்தம்.ஆன்மாக்களின் நித்தியத்துவத்தையும், தனித்தன்மையையும் கெடுக்காது நிலைநாட்டி இவ்வுலக வாழ்வை உண்மையானதும், பயனுடையதுமாக்கி இம்மை மறுமை இரண்டையும் சிறப்புடையன ஆக்கிய தனிச் சிறப்பு சைவசித்தாந்துக்கு மட்டுமே உரியது. இந்தியா விலுள்ள மதங்கள் அனைத்திலும் சைவசித்தாந்தமேமிகமேம்பட்டது என்பதில் ஐயமில்லை என மேனாட்டுஅறிஞரானஜி..யூ,போப் கூற- சைவசித்தாந்தம் இந்திய சிந்தனைகளதும் உணர்வினது சிகரம் ஏற்றிப் போற்றுகின்றார் கௌடி என்னும் அறிஞர்.

சைவசித்தாந்தம் மூன்று பொருள்களைப் பற்றிச் சொல்கிறது.நமது சிந்தனைக்கும்,ஆராய்ச்சிக்கும் உரிய வியம் அனைத்தையும் இந்த மூன்று பொருள்களுள்ளும் அடக்கலாம்.இறை, உயிர், தளை, என்பனவே அவை.

சைவசித்தாந்துக்கு முக்கிய ஆதாரங்கள் வேதங்களா ஆகமங்களா என்று நோக்கும் இடத்து இரண்டுமே பிர மாண நூல்கள்தான்.எனினும் வேதங்களைவிட ஆகமங்களே முக்கிய மா னவை எனக் கொள்ளமுடிகிறது.வேதங்களைப்பொதுப்பிரமாணமாகவும் ஆகமங்களைச் சிறப்புப் பிரமாணமாகவும் கொள்ளுவது மரபாக உள்ளது. ஆக மம் என்பதற்கு விளக்கம் - பதி, பசு , பாசம் பற்றிக்கூறுவது என்று அறிகின்றோம்.

தோத்திஅரங்களும் சாத்திரங்களும் சைவத்தின் கண்ணாக விளங்குவதோடு நின்றுவிடாமல் - சைவசித்தாந்தக் கருதுக்களையும் தன்னகதே கொண்டு நிற்கின்றன் என்பது முக்கியமானதாகும்.இந்த நிலையில் திருவாசகம் என்னும் தேனான - தோத்திர நூல் எந்த அளவுக்குச் சைவ சித்தாந்த உண்மைகளைக் கொண்டிருக்கிறது என்று பார்ப்பது பொருதமாய் இருக்கும் அல்லவா?

எமது உடம்பில் சிரசு மேலா னது.அதற்கு மேலாக இருப்பது சிகையாகும்.சிகைக்கு மேலொன்றுமில்லை.ஆகவே சிகாமந்திரமாக விளங்கும் திருவாசகத்துக்கு மேல் சிறந்த நூல் இல்லை என்று பெரியவர்கள் சொல்லுவர்.இந்தத் திருவாசகத்தில் சிவபுராணம் முக்கிய பகுதியாகக் கொள்ளப்படுகிறது.அதன் ஆரம்பமே சைவ சித்தாந்தத்தின் முக்கிய கருவைக் கொண்டிருக்கிறது எனலாம்.

நமச்சிவாய வாழ்க
நமச்சிவாய என்பது திருவைந்தெழுத்து மந்திரமாகும்.இதன் பொருள் -
ம - பாசம்
ய - பசு
சி- பதி
ந - திரோதான சக்தி
வ - அருட்சக்தி

திருவாசகம்இறைவனுடைய தலைமைப் பண்பையும், அவனுக்குட்பட்ட உயிர்களின் அடிமைப்பண்பையும், பொருத்தமாக விளக்கிச் சொல்வதைக் காணலாம்.உயிர்கள் மலம் நீங்கி இறைவன் அருள் பெற மணிவாசகர் பாடியதால் திருவைந்தெழுத்தின் எல்லா வடிவங்களையும் திருவாசகத்தில் காணமுடிகிறது.



தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

தொல்லைக்குக் காரணம் பிறவி.அதை எடுப்பதே பெரிய தளையாகும்.பிறவிப் பிணியகல இறையருள் தேவை.இறையருள் கிட்டினால் ஆனந்தம்.பிறவி நோயும் அறியாமையும் அகன்றவுடன்சிவானந்தம்ஆகிய பேரானந்தம் விளையும்.அந்த ஆனந்தத்தை எப்படிப் பெறலாம் என்று எமக்கெல்லாம் காட்டி நிற்கிறது திருவாசகமாகிய தேன் என்று இப்பாடல் காட்டி நிற்கிறதல்லவா? அதுமட்டுமல்ல சைவசித்தாந்த உண்மையும் இதனுள் காட்டப்படுவது நோக்கத்தக்கது.

சைவசித்தாந்தம் - மாயை, கன்மம், வினை பற்றியெல்லம் சொல்லுகிறது.பிறப்புக்கு காரணம் வினை.ஆன் மாக்கள் உடம்பை எடுப்பதற்கும்- பிறப்பதற்கும்- இறப்பதற்கும், அனுவிப்பதற்கும்- இன்ப துன்பங்களுக்கும்- வினைப் பயனே காரணமாகிறது. இவற்றைத் திருவாசகம்-
14 - மாயப் பிறப்பறுக்கும்
20 -முந்தை வினை முழுதும்
25 -பொல்லா வினையேன்
26 - புல்லாகிப் பூடாய் .............. எனத் தொடங்கி எல்லாப் பிறப்பும்

பதி என்று பேசப்படும் இறைவன் ஆன்மாக்களின் மலபந்தங்களைநீக்கமுயலுகிறான். இறைவனின் அருள் நோக்கம் ஒன்றினால்தான்ஆன்மாக்களின்

(7ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு இன ஐக்கியத்துக்காக ஆதரவளிக்குக

## சிறுபான்மை தரப்பினரிடம் நீதி அமைச்சர் கோரிக்கை



இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை உறுதிப்படுத்தி சிறந்தவொரு இலங்கையைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டே உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், இம்முயற்சிக்கு அனைத்து தமிழ்த் தரப்புக்கள் உட்பட அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் முழுமையான ஆதரவை வழங்குமாறு பகிரங்கமாகக் கோருவதாகத் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜனவரியில் ஆணைக்குழு குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான சட்டமூல வரைவு தயாரிப்பு மற்றும் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் எதிர்காலத்தைக் கருதி மிக முக்கியமான சட்டவரைவொன்றைத் தயாரித்து வருகின்றோம். குறிப்பாக, இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி சகவாழ்வை உறுதிப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாக உள்ளது.

அதன் அடிப்படையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. அச்சட்டமூலத்துக்கான வரைவு எதிர்வரும் ஜனவரி மாதம் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படவுள்ளது.

அதன் அடிப்படையில் சட்டமூலம் தொடர்பில் அனைத்து தரப்பினரது கருத்துக்களையும் கேட்டறிந்து அவசியம் ஏற்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு, அதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்படவுள்ளது. இந்தச் செயற்பாடானது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இனங்களுக்கு இடையில் நீடித்துக்கொண்டிருக்கும் முரண்பாடுகளைக் களைவதற்கு ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றாகவே பார்க்கின்றேன்.

விசேடமாக எதிர்கால சந்ததியினர் உள்நாட்டில் தமது எதிர்காலம் தொடர்பில் சந்தேகங்களைக் கொண்டிருக்கின்ற தற்போதைய சூழலில் மிகவும் முக்கியமானதொரு பணி முன்னெடுக்கப்படுகிறது.

ஆகவே, இந்தச் செயற்பாட்டுக்கு விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அதுமட்டுமன்றி, முஸ்லிம், மலையக கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், இதுகால வரையிலும் எந்தவொரு ஆட்சியாளரைப் பாதுகாக்கின்ற வகையிலோ அல்லது இனக்குழுமத்தை, தனிநபர்களை இலக்குவைத்து சட்ட வரைவுகளைச் செய்ததில்லை. எதிர்காலத்திலும் அதனைச் செய்யப்போவதுமில்லை.

ஆகவே, வர்த்தமானி அறிவித்தலின் பின்னர், அனைத்து தரப்பினரும் தமது கருத்துக்களை வெளியிட முடியும். அவற்றை ஆராய்ந்து சட்டமூலத்தின் தேவை ஏற்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்குத் தயாராகவே உள்ளேன்.

அதுமட்டுமன்றி, கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது இந்த விடயம் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

அச்சமயத்தில் நேர்மறையான பிரதிபலிப்புக்களே கிடைத்துள்ளன. யாரும் எதிர்த்திருக்கவில்லை. ஆகவே, தொடர்ச்சியான காலத்தில் இந்த விடயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அனைத்து தரப்பினரும் பங்கேற்புடன் ஒத்துழைப்புக்களை வழங்கி ஆதரவளிக்க வேண்டும் என்று பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றேன். - என்றார். (05)

## இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் உட்பட 10 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம்

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண உட்பட பத்து சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமனம் வழங்கப்பட்டுள்ள நிலையில் உயர் நீதிமன்றத்தின் சம்பிரதாய அமர்வைத் தொடர்ந்து பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

அதனடிப்படையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவட்ண மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளான சமந்த வீரகோன், கலாநிதி அசங்க குணவன்ச, மொஹமட் அடமலி, ஹர் பெர்னாண்டோ, கலாநிதி சிவாஜி பீலிக்ஸ்பைசா மார்க்கர், உபுல் குமாரப்பெரும, விரன் கொரியா மற்றும் எராஜ் டி சில்வா ஆகியோரே மேற்படி ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நிய மிக்கப்பட்டுள்ளவர்களாவர். (05)

## தனிமையில் இருந்த மூதாட்டி வீடு மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்து-வரும் மூதாட்டியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் உள்ள வீடொன்றில் மூதாட்டி ஒருவர் தனிமையில் வசித்து வருகிறார்.

அவரது வீட்டுக்குச் சென்ற சில சந்தேகநபர்கள் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




## ஜனாதிபதி தேர்தல் ........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறான நிலையில் நாடாளுமன்ற தேர்தல் பற்றிய உரையாடல் அவசியமற்றதான்றாகும்.

உண்மையில், ஜனாதிபதித் தேர்தலுக்காக எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் களத்தில் இறங்க மாட்டார்கள். ஆனால் பொதுத் தேர்தல் என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வெற்றிக்காக களத்தில் இறங்குவார்கள். ஆகவேதான் பொதுத்தேர்தல் பற்றிய கதையொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் உள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கிராமங்களுக்குச் செல்ல முடியாத சூழல் உள்ளது. குறிப்பாக, கிராமங்களில் சாவு வீடுகள் நிகழ்ந்தால்கூட அவர்களால் செல்ல முடியாத நிலைமைதான் உள்ளது.

அவ்வாறான நிலையில் தற்போது ஜனாதிபதியால் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்கு வலிந்து அனுப்பவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. அதற்காகவே நாடாளுமன்ற தேர்தல் நடைபெறப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் மக்களைத் தேடிச் செல்வதற்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. நாம் நாட்டை பாதுகாப்பதற்கான போராட்டத்தினை எப்போதோ ஆரம்பித்து விட்டோம். எமது தலைவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று நாட்டின் தலைவர் ஆகுவார். ஆந்த இலக்கை நோக்கி நாம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே பயணிக்க ஆரம்பித்து விட்டோம் என்றார்.

## ஜனாதிபதி தேர்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தை சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவும் நிலையில் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார தரப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## உலக தமிழர் பேரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பித்து நேற்றுடன் 2500ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், போராட்ட கொட்டகைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உலகத் தமிழர் பேரவையினரின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு விரோதமானது என்று சுட்டிக் காட்டி தமது கோசங்களை எழுப்பினார்கள்.

தமிழினத்தைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் உலகத்தமிழர் பேரவையினர் இமாலய துரோகிகள் என்று தெரிவித்ததோடு தமிழ் மக்களுடைய அபிலாஷைகளையும் இறைமையும் பாதுகாப்பதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றே உரிய தீர்வு எனவும் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் புகைப்படம் மீது முட்டை வீசி தமது எதிர்ப்பினையும் வெளிப்படுத்தினர்.

அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இமாலயப்பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்ததோடு அதனை அனைத்து தமிழர்களும் எதிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

## நாடு விடுதலை பெறும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பேராயர் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஒருவேளை உணவைக்கூட சரியாகப்பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் 8 மில்லியன் மக்கள் காணப்படுவதாக சில மாதங்களுக்கு முன்னர் தெரியவந்தது.

அந்த எண்ணிக்கை தற்போது இருமடங்காகியிருக்கக் கூடும். எதிர்கால கனவுகள் அனைத்தும் சிதைந்து போன நிலையிலேயே நாட்டிலுள்ள பலரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு மத்தியில் வரி சுமைய அதிகரித்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து, தொழில்களை இழந்து, பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாத பலரும் இன்று இந்த நாட்டில் உள்ளனர்.

இவ்வாறான நிலையிலும் உலகில் ஊழல், மோசடிகள் அதிகம் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றமை உண்மையில் கவலைக்குரியதாகும்.

ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது. உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கூட கவனத்தில் கொள்ளாத, நீதியும் நியாயமும் அற்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. அதிகார மோகத்திலுள்ளவர்களாலேயே நாடு ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறானவர்களால் இம்முறை நத்தார் பண்டிகையில் வறுமையிலுள்ளவர்களுக்கு கை கொடுப்பதற்கானதாக அமைந்துள்ளதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே இல்லாதோருக்கும் வறியவருக்கும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு சகல கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கமல்லாத மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## அஸ்வெசுவ கொடுப்பனவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேகாலையில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முறை உரியவாறு விண்ணப்பங்களை அனுப்ப முடியாத தரப்பினர் தொடர்பில் கவனம் செலுத்தி ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய மீண்டும் விண்ணப்பங்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இதன் முதற்கட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அப்போது நாம் எதிர்கொண்ட நடைமுறைச் சிக்கல்களை அறிந்து கொண்டிருக்கின்றோம்.

அனுபவம் வாய்ந்த அரச அதிகாரிகள் எவ்வாறு பொருத்தமானவர்களைத் தேடுவது, எமது அளவுகோல்களில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள். இவை அனைத்தையும் வைத்து ஜனாதிபதி ஜனவரியில் மீண்டும் விண்ணப்பங்களை கோர உத்தரவிட்டுள்ளார். தற்போது 20 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். தேவையேற்படின் பாராளுமன்றத்துக்கு அறிவித்து இதனை மேலும் 4 இலட்சத்தால் அதிகரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்றார்.

## இளையவர் ஒருவரே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டு நவம்பரில் புதிய ஜனாதிபதி நாட்டைப்பொறுப்பேற்க வேண்டும். துறைசார் நிபுணத்துவம் மிக்க இளையவர் ஒருவரே நாட்டைப் பொறுப்பேற்க வேண்டும்.

அவ்வாறான வேட்பாளர் ஒருவரையே நாம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவோம். அதன் மூலம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அந்த வகையில் எமது வேட்பாளர் நவீனத்துவத்துடனான சிந்தனைகளையும் நாட்டின் எதிர்காலம் பற்றிய சிந்தனையையும் வெளிப்படையாகக் கொண்டிருப்பவராக இருப்பார் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மேன்மைகொள் சைவநீதி விளங்க.....................

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மலபந்தம் அகல முடியும்.இதனைத் திருவாசகம் காட்டும் விதம் நயக்கத்தக்கதே.

18 – அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி
38 –மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
40 –அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
42 – ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
48 – பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
64 – பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
78 – காக்கும் எம்காவலனே
87 – மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
88– கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
91 அல்லல் பிறவி அறுப்பானே .......................
( திருவாசகம் )

மணிவாசகப்பெருமான் இவற்றையெல்லாம் தன்மேலேற்றிக் கூறியிருந்தாலும் - இவற்றினூடாகச் சைவசித்தாந்த உண்மைகளை மற்றவர்களும் இலகுவில் விளங்கும் வண்ணம் செய்துள்ளார் என்று எண்ணலாம் அல்லவா ?

உயிர்கள் பதியினைப் பிரிந்து பாசத்துக்கு உட்படும் நிலை செயற்கையானது. பதியினை அடையும் நிலை இயற்கையானது. இக்காரணத்தினால்த்தான் யாராவது இறந்து போனால் இயற்கை எய்தினார் என்கிறோம். இந்த உலக வாழ்வு செயற்கையானது.அது வருவதற்குக் காரணம் அவா ஆகும்.அவா ஆனது விரைவில் மறைய மாட்டது.அதனை முயன்றே போக்கவேண்டும்.அப்படிப் போக்கினால் இறைவனிடம் இருந்து நீங்காத இயற்கைத் தன்மையைப் பெறும். இதனை வள்ளுவர் பேரா இயற்கை என்று குறிப்பிட்டாரோ எனக் கருதக்கூடியதாக இருக்கிறது. இக்கருத்தை திருவாசகம் கோவில் மூத்த திருப்பதிகத்தில் காட்டுவதும் நோக்கத்தக்கது.

இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளக்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
னீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறிகிற்பாரே.

உயிரனது சிவத்தோடுஒடுங்கும்பேரருள் நிலை இங்கு காட்டப்படுகிறது. இதனால் திருவாசகத்தில் இதனை ' இருதயப் பாடல் எனப் பெரியவர்கள் கருதுவர். சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் என்னும் அடிகள் மூலமாக உயிரின் பாசநீக்கம் - சிவப்பேறு காட்டப்படுகிறது.

மலம் என்று சொல்லும் பொழுது எமக்கெல்லாம் அருவருப்பு ஏற்படுகிறதல்லவா? முகத்தைச் சுழிக்கின்றோ மல்லவா ? ஆனால் இந்தச் சொல் தத்துவ விளக்கமாக சைவ சித்தாந்தத்தில் இடம் பெற்று நிற்கிறது. சகல வித மான சிக்கல்களுக்கும் மலமே காரணமாக இருக்கிறது.இந்த மலமானது ஆணவம், கன்மம், மாயை எனச் சைவ சித்தாந்ததில் பேசப்படுகிறது.அறியாமையை விளைவிப்பது ஆணவ மலம்.இன்ப, துன்பங்களை விளைவிப்பது கன்ம மலம்.மயக்கத்தை உண்டுபண்ணுவது மாயா மலம்.இந்த மயக்கத்தினால் -ஆன்மாவானது தன்னை உடம்பாகவும், உலகில் காணப்படும் போகங்களை உண்மையானதெனவும் எண்ணிவிடுகிறது.

இதனால் மாயையும் மலங்களில் ஒன்றாகிவிடுகிறது.

திருவாசகம் மலம் பற்றிக்காட்டிநிற்கிறது.மலத்தைக் காட்டுவதோடு - அதனைப் போக்குதற்கு யார்தான் உள்ளார் என்பதையும் கூறி நிறபது நோக்கத்தக்கது.

111 –மூலமாகிய மும்மலமறுக்கும்
112 –தூயமேனிச் சுடர்விடு சோதி ( கீர்த்தித் திருவகல் )
122 –முத்தா போற்றி முதல்வா போற்றி
128 –மன்னிய திருவருள் மலையே போற்றி
194 மருவிய கருணை மலையே போற்றி (போற்றித் திருவகல்)

8 ..... உழிதரு காலத்து உன் அடியேன்
செய்த வல்வினையைக்
கழிதரு காலமும் ஆய் அவை காத்து
எம்மைக் காப்பவனே.
16 – நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் ( திருச்சதகம் )

2உள்ளமலம்மூன்றும்மயஉகுபெரும் (பண்டாய நான்மறை 20 20வாழ்கின்றாய் வாழத நெஞ்சமே வல்வினைப் பட்டாழ் கின்றா யாழாமற் காப்பனை யேத்தாதே சூழ்கின்றய்கேடுனுக்குச் சொல் கின்றேன் பல்காலும் வீழ்கின்றாய் நீயவலக் கடலாயவெள்ளத்தே (திருச்சதகம்) மூலமலம் வினைபற்றிச் சொல்லி - இவை போக இறைவன் துணை எத்துணை அவசியமனது என்பதையும் இப்பாடல் சுட்டி நிற்பது நோக்கத்தக்தாகும்.

1 முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வாண்ணஞ்
சித்தமலம் யறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே,
2 ...... மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி ...

என்று காட்டி நிற்கும் திருவாசகம் சொல்லும் இறைவனின் பலபரிபாக நிலையும் ஆகொள்ளும் நிலையும் , யாவரும் விளங்கும் வண்ணம் இருக்கின்றது என்பது புலனாகிறதல்லவா ?

பிறவிக்குக் காரணம் மலங்கள் தான்.எனவேதான் திருவாசகம் ஆர்த்த பிறவித்துயர் என்று கூறியதும் நோக்கத்தக்கது.திருவம்மானையில் எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம் தரமும் ஆட்கொண்டு' என்றும் ... கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை வெள்ளத்தழுத்தி வினைகடந்த வேதியனே .. என்றும்.. கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட .. என்றும் இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து என்றும் , அப்பிறயைப் போக்க இறைவனே துணையென்பதும் காட்டப்பட்ட விதம் யாவரது உள்ளத்தும் பசுமரத்தாணி போல் பதியுமல் லவா ?

வேற்றுவிகார விஅடக்குடம்பின் உட்கிடக்க ஆற்றேன் என்கிறார் மணிவாசகர். இந்த உடம்பு புண்மயமானது. மலஞ்சோரும் ஒன்பதும் வாயிற்குடிலை என்று சொல்லுவதைக் கேட்கும் பொழுது உடம்பின் அருவ ருப்புத் தெரிகிறதல்லவா? அது மட்டு மல்ல புறந்தோல் போர்த்தங்கு புழுவழுக்கு மூடி -இதுவும் உடம்புதான் இதனால் இந்த உடம்பினுள் இருக்கும் பிறவி நிலைக்கு ஆற்றேன் ஆற்றேன் என்று மணி வாசகர் திருவாசகம் மூலம் வெளிப்படுத்தி நிற்பது தத்துவத்தின் சாரம் அல்லவா? ஆறுதல் தருபவன் யாரெனின் அது இறைவன் மட்டுமே என்பது திருவாசகத்தின் கருத்துத்தானே! இதனால்த்தான் அவன் அருளாலே அவன்தாழ் வணங்கி என்று போதித்து நிற்கிறது.

சைவசித்தாந்தம் கடவுள்க்கொள்கையை முக்கியமாகக் கருதுகிறது. சிவன் என்னும் சொல்லிலிருந்து வந்ததுவே சைவம் ஆகும். சித்தாந்தம் எனக் குறிப்பிடாது சைவசித்தாந்தம் என்று சிவத்தையும் சம்பந் தப்படுத்தி வழங்குவதிலிருந்து சிவனுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது புலப்படுகிற தல்லவா?

சைவசித்தாந்தம் பதி என்று குறிப்பிடுவது இறைவனையே.இந்த இறைவனை இறை, கடவுள், பதி, பரம சிவம், சிவம், ஈசன், பேருயிர்,பரமாத்மா என்று பல பெயர்களில் அழைப்பதைக் காண்கிறோமல்லவா? ஒரு நாமமோ ஒரு உருவமோ இல்லா இறைவனுக்குப் பல நாமங்கள் கொடுத்து வணங்குவதையும் காண்கிறோம் தானே! இதில் கடவுள் என்ற சொல் பலவித அர்த்தங்களை உள்ளடக்கியதாகும். உள்ளத்தைக் கடந்தவர், உலகையும் கடந்தவர், உலகுள்ளும் இருப்பவர், உயிர்கள் உள்ளும் வியாபித்து நிற்பவர், இந்தக் கருத்துக்கள் சைவசித்தாந்தமே.இதனை மணிவாசகரும் திருவாசகத்தில் காட்டுகிறார்.



137– பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
138 – நீ ரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
139 – தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
140– வளியிட இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
141 –வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

திருப்பள்ளி எழுச்சியால் இறைவனைத் துயில் எழுப்ப மணிவாசகர் முயலுகிறார். எம்மை எல்லாம் அஞ்ஞான இருளில் இருந்து எழுப்புவதற்கு இது உதவுகிறதல்லவா? திருப்பள்ளி எழுச்சியில் இறைவனைப் பற்றி மணிவாச்கர் காட்டுவது சைவசித்தாந்தக் கடவுள் கொள்கையை விளக்கி நிற்பதாக இருக்கிறது.

பூதங்கள் தோறும் நின்றாயெனின் அல்லால்
போக்கு இலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக்கண்டு அறிவாரைக்
சீதம் கொள்வயல் திருபெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள்புரியும்

எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

கடவுள் பற்றிச் சைவசித்தாந்தம் என்ன கருதுகின்றது என்பதற்கு மேலும் பலவற்றை திருவாசகம் தந்து நிற்கிறது.

மின் ஆர் உருவ விகிர்தா போற்றி
நதி சேர் செஞ்சடை நம்பா போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் எளிய அழகே போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
சடை இடை கங்கை தரித்தாய் போற்றி
தென்நாடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்கும் இறைவா போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
அருவம் உருவமும் ஆனாய் போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
சிந்தனைக்கும் அரிய சிவமே போற்றி
புரம்பல எரித்த புராணா போற்றி
பரம் பரம் சோதிப்பரனே போற்றி

திருச்சதகத்தில் உள்ள கீழ்வரும் பாடல் சைவசித்தாந்தக் கடவுள் கொள்கையை மிகவும் சிறப்பாகக் காட்டி நிற்கிறது.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்றவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே !

இறை அனுபவத்தை மணிவாசகர் திருவாசகத்தில் வெளிப்படுத்தியுள்ள பாங்கு அவரது எளிமையினையே காட்டி நிற்கிறது.இரக்கமும், உருக்கமும், இணைந்து இறை அனுபவத்தை உணரப்பண்ணி இருக்கிறது திருவாச கமென்னும் தேன் என்றால் அது மிகையாகாது.மணிவாசகர் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே என அழைத்து பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து பாவியேனுடைய ஊனினை உருக்கியவன் என்று விளக்குகின்றார். ஒப்புனக்கில்லா ஒருவனே - பாசவேர் அறுக்கும் பழம் பொருளே, பிறவி வேரறுத்து என் குடிமுழுதாண்ட பிஞ்ஞகா என்றும் கூறிநிற்கின்றார். இவையெல்லாம் சைவசித்தாந்த நெறிகளைக் காட்டும் திருவாசகச் செய்திகள் எனலாம்.

சைவசித்தந்தம் தமிழர் சொத்து.சைவத்தின்சொத்து. திருவாசகம்-தமிழரதும்சைவத்தினதும் சொத்தாகும். சொத்துக்களைப் பிரிப்பது முறையற்றது. சைவசித்தாந்தச் சொத்து திருவாசகச் சொத்தினுள் இருக்கின்றது என்பதைப் பல நிலைகளில் பார்த்தோம் அல்லவா? சைவசித்தாந்தத்துக்குச் சாத்திர நூல்கள் எந்த அளவுக்கு முக்கிய த்துவமோ அதே அளவு தோத்திர நூல்களும் முக்கியமானதாக இருக்கின்றன.

அந்தவகையில் தோத்திர நூலான திருவாசகம் என்னும் தேன் சைவசித்தாந்தக் கருதுக்களை எந்த அளவுக்குக் கொண்டிருக்கிறது என்பதைக் காணமுடிகிறதல்லவா? என்வே சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம், இறைபற்றி அறியத் திருவாசகம் என்னும் தேனை நாடலாம் என்னும் எண்ணம் உங்கள் உள்ளமதில் தோன்றி இருக்கும் என்று எண்ணுகிறேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்கத் திருவாசகத்தேனைப் பருகுங்கள் ! இறையடி தொழுமின்கள் ! ஈசன் புகழ் பாடுங்கள் 1

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர்பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே .
( சிவப்பிரகாச சுவாமிகள் )

# குற்றங்களை 50 வீதத்தால் குறைக்க எம்மால் முடியும்

## தேசபந்து தென்னக்கோன் சபதம்

குற்றங்கள் பாரியளவில் குறைவடைந்துள்ளன. தற்போதைய சுற்றிவளைப்புகளை விஸ்தரிக்கும் பட்சத்தில் 6 மாதங்களில் குற்றங்களை 50 வீதமாகக் குறைக்க முடியும் என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பாரியளவில் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன எனக் கூறப்பட்ட போதிலும், நெத்தலிகளே கைது செய்யப்படுகின்றன எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அந்த கருத்தில் ஓர் உண்மையும் இருக்கிறது. நெத்தலிகள் போதைப்பொருளுடன் வீதிக்கு இறங்கும்போதே அவர்களை கைது செய்ய பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கின்றனர். அவர்களை அவ்வாறே விட்டுச் செல்ல முடியாதல்லவா? சிறிய மீன்களை பிடித்ததன் பின்னர், பாரிய மீன்களை இலகுவாக எம்மால் கண்டுபிடிக்க முடியும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

போதைப்பொருள் பாவனையாளர்களும் போதைப்பொருள் வர்த்தகர்களும் இருவேறு தரப்பினர் அல்லர். கடந்த 17ஆம் திகதியின் பின்னரும் அதற்கு முன்னரும் உள்ள நிலைமையும் நான் அவதானித்தேன். குற்றங்கள் பாரியளவில் குறைவடைந்துள்ளன. தற்போதைய சுற்றிவளைப்புகளை விஸ்தரிக்கும் பட்சத்தில் 6 மாதங்களில் குற்றங்களை 50 வீதமாகக் குறைக்க முடியும். நாம் கண்டறிந்துள்ள 1,091 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் முழு நாட் டிலும் இருக்கின்றனர்.

இவர்கள் காலையில் குற்றங்களை செய்துவிட்டு இரவில் போலி கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்கிறார்கள்.

காலையில் கொலை செய்துவிட்டு இரவில் வெளிநாட்டுக்கு செல்லும் முறைமை ஜனவரியிலிருந்து மாற்றமடையும். ஜனவரி மாதம் அவர்கள் விமான நிலையத்தில் கைது செய்யப்படுவார்கள்.

மேலும், 31 பாதாள குழு உறுப்பினர்கள் சிறைச்சாலையில் இருந்து குற்றங்களை வழிநடத்துகின்றனர். இவர்களையும் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டங்களும் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. சாதாரண மக்களுக்கு எதிராகவோ அல்லது பொலிஸாருக்கு எதிராகவோ பாதாளக் குழு உறுப்பினர்கள் ஆயுதங்களை ஏந்தி செயற்படும்போது அவர்களுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தகுந்த பாடம் புகட்டப்படும். -என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

### நுளம்புகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேல் சேர்க்கப்பட்டுள்ளனர், குழந்தைகள் விடுதி டெங்கு நோயாளிகளால் நிரம்பி வழிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒருவருக்கு காய்ச்சல் எற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடுவது சால சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### போதைக் கடத்தல்காரர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திறந்து வைத்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்த அமைச்சுப் பதவியில் இருக்கும் வரையில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

எந்தவொரு நாட்டிலும் முழுமையாக இந்த சக்திகள் ஒழிக்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை. எனினும் அடுத்த ஆறு மாதங்களுக்குள் நான் பதவியில் தொடர்ச்சியாக நீடிக்கும் பட்சத்தில் நிச்சயமாக எந்தவொரு தரப்பினரின் அழுத்தங்களுக்கும் அடிபணியாது யுக்திய சுற்றிவளைப்பு செயற்பாட்டை முன்னெடுப்பேன்.

மேலும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய நாட்டுக்கு வெளியில் உள்ளவர்களையும் மீண்டும் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் டுபாய் மட்டுமல்ல, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் கடத்தல்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கைகளை அந்தந்த நாடுகளின் சட்டங்களுக்கு அமைவாக முன்னெடுத்துள்ளோம்.

இருப்பினும், வெளிநாடுகளில் காணப்படுகின்ற மாறுபட்ட சட்டங்களின் காரணமாக கைது செய்தவர்களை நாட்டுக்குள் கொண்டுவருவதில் சவால்கள் காணப்படுகின்றன. காலதாமதங்கள் ஏற்படுகின்றன என்றார்.

### மருந்துக் கொள்வனவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர்சைக்குரிய குறித்த ஆவணங்களில் காணப்படும் கையொப்பங்களை பரிசோதிப்பதற்காக இந்த நடவடிக்கை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கடந்த 20 ஆம் திகதி விசாரணை நடத்தியிருந்தனர்.

சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்து கொள்வனவு தொடர்பில் குறித்த விசாரணை இடம்பெற்றதோடு அவ்வலுவலகத்தில் காணப்பட்ட ஆவணங்களும் 2 நாட்களாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருளுக்குப் பணம் செலுத்தாமல் தப்பிச் சென்ற ரஷ்ய பிரஜையை துரத்திச்சென்று பிடித்த பொலிஸார்

ஹபராதுவபிரதேசத்தில்உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருளைப் பெற்ற பின்னர், பணத்தை செலுத்தாமல் தப்பிச் சென்ற ரஷ்ய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

39 வயதான ரஷ்ய பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ரஷ்ய பிரஜை சுமார் 5 நாள்களுக்கு முன்னர் எரிபொருள்நிரப்புநிலையத்துக்குச் சென்று, தனது காருக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டு பணத்தை செலுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அவர் தப்பிச் செல்லும்போது ஹபராதுவ பொலிஸார் அவரை துரத்திச் சென்று சந்தேக நபரை காருடன் கைது செய்துள்ளனர். (05)

# பெருமளவான கசிப்புடன் யாழில் கைதான பெண்

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் 19 ஆயிரத்து ஐந்நூறு மில்லிலீற்றர் கசிப்புடன் 34 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை குறித்த பெண்ணின் வீட்டில் சுன்னாகம்பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## யாழ். வெற்றிலைக்கேணியில் 14 மில்லியன் ரூபா கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி வெற்றிலைக்கேணி பகுதியில் 14 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டது. வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் கரை ஒதுங்கிய சாக்கு மூடை ஒன்று மீட்கப்பட்டது.

அந்த சாக்கு மூடையை சோதனை செய்த கடற்படையினர், அதில் இருந்து 16 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 35 கிலோ கேரள கஞ்சாவை மீட்டனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா மேலதிக நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

### குற்றவியல் சட்டக்கோவையில் ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறைகளில் அளவுக்கதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்துக்கு அமையவே எம்மால் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். எனினும் எமது நாட்டில் சட்டத்தில் நிலவும் குறைபாடுகள் காரணமாக, சில கைதிகள் அதிக காலம் சிறையில் உள்ளனர்.

அமைச்சரவையின் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு அமைவாக, அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளேன். குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தங்களை மேற்கொண்டு சட்டமூலத்தை தயாரித்துள்ளோம்.

நீதி மன்றத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளவர்களின், தண்டனைக் காலத்திலிருந்து விளக்கமறியல் காலத்தைக் குறைப்பதற்கு ஏற்றவகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை



ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன் என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2023இல் வெளியிடப்பெற்றது.